[1986 நவம்பர் 24

அச்சன்புதூர் பேரூராட்சியில் அரசு மருத்துவமனை.

154—(*வினா எண். 9192) திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் அச்சன்புதூர் பேரூராட்சி பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுவிட்டதா?

(இ) எப்பொழுது பணிகள் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. **சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) மற்றும் (இ): கேள்விக்கு இடமில்லை.

திரு. தெ. பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட அச்சன்புதூர் பேரூராட்சியில் அன்றாடக் கூலி வேலை பார்க்கக்கூடிய ஏழை எளிய மக்கள் வாழ்கிறார்கள். ஒரு தொழிலாளி நோய்வாய்ப்பட்டால் ஏறத்தாழ கடையநல்லூரில் உள்ள மருத்துவ மனைக்கு வருவதற்கு பத்து கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஏழை எளியவர்களாக இருக்கின்ற காரணத்தினால் ஒரு டாக்சி அமர்த்திக்கொண்டு வர முடியாது. அங்கே மிகவும் மோசமாக இருக்கக்கூடிய நோயாளிகளைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது அச்சன்புதூரிலே ஒரு மருத்துவமனை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. **சண்முகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுகோள் வைக்கிறார்கள்; கேள்வி கேட்கவில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை தாலுக்கா அச்சன்புதூரிலே இப்பொழுது அரசு மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். செங்கோட்டை தாலுக்காவில் இருக்கக்கூடிய ஆய்குடியிலே சகல வசதிகளும் பொருந்திய ஒரு அரசு ஆஸ்பத்திரி நீண்ட நெடுங்காலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் அங்கே டாக்டர்கள் இல்லை என்கின்ற புகார் பலமுறை அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டும்கூட இன்னும் அங்கே டாக்டர்கள் நியமிக்கப்படவில்லை. அமைச்சரவர்கள் இந்த

1986 நவம்பர் 24]

வேண்டுகோளை ஏற்று உடனடியாக ஆய்குடியிலே ஒரு ஆண் மற்றும் பெண் மருத்துவர்களை நியமனம் செய்வதற்கு உத்தர விடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு மருத்துவர்கள் இல்லையோ அங்கெல்லாம் மருத்துவர்களை நியமிக்க ஆணை பிறப்பித்தாகிவிட்டது.

முகையூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை.

155—(*வினா எண். 10085) திரு. மு. சந்திரசேகர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம்—முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மணலூர்பேட்டை பேரூராட்சி எல்லையில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றி அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இல்லை.

தமிழ்நாடு இந்து கோயில்களின் ஆண்டு வருமானம்.

156—(*வினா எண். 1257) திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதிலுமுள்ள இந்து கோயில் சொத்துக்களில் இருந்து அரசுக்குக் கிடைக்கும் மொத்த ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) அப்பணம் எதற்கெதற்கெல்லாம் செலவழிக்கப்படுகிறது?

(இ) ஒவ்வொரு செலவினத்தின் மீதும் செலவழிக்கப்படும் பணத்தின் விழுக்காடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோயில்களிலிருந்து உதவித் தொகை மற்றும் தணிக்கைத் தொகை வகையில் அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 1,58,95,219 ஆகும்.